# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**20.09.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

### 1. பொறுப்பு தலைமை நீதிபதி நியமனம்

- சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக மூத்த நீதிபதி **டி.ராஜாவை** நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.
- சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்த **முனிஸ்வரநாத் பண்டாரி** கடந்த செப்டம்பர் 12ஆம் தேதி ஓய்வு பெற்றார்.
- அதையடுத்து உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக எம் துரைசாமி நியமிக்கப்பட்டார் இவர் செப்டம்பர் 21இல் பணி ஓய்வு பெற உள்ளார்.

### 2. தமிழகம் மேகாலயம் ஒப்பந்தம்

- **மருத்துவ சிகிச்சை முறைகளை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்** தமிழகம் மேகாலயம் இடையே சென்னையில் கையொப்பமானது.
- **ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல அவசர சிகிச்சை பயிற்சி, உயிர்காக்கும் மயக்கவியல் திறன் பயிற்சி மற்றும் மீயொலி கருவி ஆகிய பயிற்சிகள்** தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம் ஆனது.

### 3. பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு செயலி மூலம் கண்காணிப்பு

- பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு முறையாக விநியோகிக்கப்படுகிறதா என்பது குறித்து செயலி மூலம் அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.
- **சிஎம் 13 எப்எஸ்** என்ற செயலி மூலம் அதிகாரிகள் கண்காணிக்கிறார்கள்.
- அதிகாலையில் சமையல் செய்யத் தொடங்கும் நேரம், முடியும் நேரம், அங்கிருந்து வாகனத்தில் கொண்டு செல்லும் நேரம், பள்ளியில் விநியோகிக்கும் நேரம், குழந்தைகளுக்கு உணவு வழங்கும் நேரம் போன்றவற்றை இந்த செயலி மூலம் **உடனுக்குடன் காணும்** வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### 4. எழுத்தாளர் கி ரா நினைவு மண்டபம்

- **தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியை அடுத்த இடைசெவல்** கிராமத்தில் சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் கி.ரா வின் நூற்றாண்டு விழா மற்றும் நினைவு மண்டபம் கட்ட அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.
- எழுத்தாளர் கி.ராஜநாராயணன், 2021 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் தேதி காலமானார்.
- தமிழக அரசு சார்பில் கி.ராவுக்கு கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் **ரூபாய் 1.5 கோடியில் நினைவரங்கம்**, சிலை மற்றும் நூலகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## மத்திய செய்திகள்

### 1. லோக்பால்

- ஊழலுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட லோக்பால் அமைப்புக்கு நிகழாண்டு **ஆகஸ்ட் 21 வரை 1719 புகார்கள்** அளிக்கப்பட்டுள்ளன.
- அவற்றில் 136 புகார்கள் விசாரணைக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் **(ஆர் டி ஐ)** பெறப்பட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- லோக்பால் மற்றும் **லோக் ஆயுக்தா சட்டம் 2013** ன் படி, கடந்த 2019 ஆம் ஆண்டு லோக்பால் அமைப்பு செயல்பாட்டுக்கு வந்தவுடன் அதன் தலைவரும், பிற உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.
- கடந்த 2020-2021 மற்றும் 2021-2022 ஆம் நிதியாண்டுகளில் முறையை 2355 மற்றும் 5680 புகார்கள் பெறப்பட்டன.
- இவற்றில் **131 மற்றும் 169 புகார்கள்** வரையறுக்கப்பட்ட வடிவத்தில் பெறப்பட்ட மனுக்கள் என தெரிவிக்கப்பட்டிருந்தது.
- கடந்த மூன்று ஆண்டில் இதுவரை குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை என லோக்பால் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
- லோக்பால் அமைப்பானது தலைவர், **நீதித்துறையைச் சார்ந்த 4 உறுப்பினர்கள் மற்றும் நீதித்துறையை சாராத நான்கு உறுப்பினர்களைக்** கொண்டது.
- லோக்பாலின் முதல் தலைவர் நீதிபதி **பினாகி சந்திர கோஸ்**.
- கடந்த மே 27ஆம் தேதி ஓய்வு பெற்றதை அடுத்து நிரந்தர தலைவர் இன்றி லோக்பால் அமைப்பு செயல்பட்டு வருகிறது.

### 2. உலகத் தூய்மை எரிசக்தி செயலமைப்பு கூட்டம்

- உலகத் தூய்மை எரிசக்தி செயலமைப்பின் 13 வது தூய்மை எரிசக்தி அமைச்சர்கள் நிலை மற்றும் ஏழாவது புதுமுறை காணலுக்கான அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டமாக இந்த மாநாடு **அமெரிக்காவின் பிட்ஸ்பர்க்** ஐக்கிய நாடுகள் ஆதரவுடன் நடைபெறுகிறது.
- பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 31 அமைச்சர்கள், விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், நூற்றுக்கணக்கான தலைமை நிர்வாக அதிகாரிகள், தனியார் நிறுவன தலைவர்கள் உள்ளிட்டோர் இந்த அமைப்பில் இடம்பெற்றுள்ளனர்.
- செப்டம்பர் 21 முதல் 23ஆம் தேதி வரை நடைபெறும் இந்தக் கூட்டத்தில் மத்திய அரசின் பல்வேறு அம்சங்களின் கூட்டு உயர்நிலைக் குழுவின் தலைவராக 5 நாள் அரசு முறை பயணத்தை அமெரிக்காவில் டாக்டர் **ஜிதேந்திர சிங்** மேற்கொள்கிறார்.
- கடந்த மாதம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டில் **(யூஎன்எப்சிசிசி)** தெரிவிக்கப்பட்ட தீர்மானத்தின் படி

இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புக்கு ஒப்புதல் அளித்தது.

- மேலும் இந்தியாவின் **75 ஆவது சுதந்திர தினத்தன்று** ( ஆகஸ்ட் 15 2022) தேசிய ஹைட்ரஜன் இயக்கத்தை பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.
- இந்த இயக்கம், அரசின் பருவநிலை இலக்குகளை எட்டுதல், இந்தியாவை பசுமை ஹைட்ரஜன் குவி மையமாக மாற்றுதல் ஆகியவற்றுக்கு உதவி செய்வதே நோக்கமாகக் கொண்டது.
- இது **2030-ம் ஆண்டுக்குள் 5 மில்லியன் டன் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி** என்ற இலக்கை எட்ட உதவும்.
- கடந்த 2021 நவம்பரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றத்திற்கான கூட்டம் கட்டமைப்பு நாடுகளின் மாநாட்டில் **26 ஆவது அமர்வில், 5 அமிர்தக் கூறுகளை ( பஞ்சாமிர்தம்)** உலகிற்கு வழங்கி பருவநிலை நடவடிக்கைகளை தீவிர படுத்த இந்தியா கேட்டுக் கொண்டது.

## விளையாட்டு செய்திகள்

### 1. உலக மல்யுத்தம்

- **செர்பியாவில்** நடைபெற்ற உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் **பஜ்ரங் புனியா வெண்கல பதக்கம்** வென்றார்.
- இதன் மூலம் உலக சாம்பியன்ஷிப்பில் **நான்கு முறை பதக்கம்** வென்ற முதல் இந்தியர் என்று பெருமையை அவர் பெற்றார்.
- உலக சாம்பியன்ஷிப்பில் இது பஜ்ரங்கின் மூன்றாவது வெண்கல பதக்கம் ஆகும்.
- இதற்கு முன் அவர் **2013ல் வெண்கலம், 2018 இல் வெள்ளி, 2019-ல் வெண்கலம்** வென்றிருக்கிறார்.